**தொழில்நுட்பவியல் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2020**

---

தொழில்நுட்பவியல் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 ஒக்தோபர் 20 ஆம் திகதிய உதவியாளர் ஆவணத்தின் (Aide Memoire) 10 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. இலங்கையில் தற்போதுள்ள இடைநிலைக் கல்வி முறைமையின் திறனை வலுப்படுத்துவதே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் செயற்பாடுகள் சிவில் பணிகள், உபகரணங்கள், தளபாடங்கள், திறன் அபிவிருத்தி எனும் பெயர்களில் உள்ளன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9287.1 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 60.70 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,650 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியன் தொகை சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1637.1 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தல் திகதி 2024 மார்ச் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

நிகழ்ச்சித்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சல் கூற்றினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆம் ஆண்டிலிருந்து செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 43 | எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் இந்த பொறுப்புக்களை நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. மேலும், 2023 ஆம் ஆண்டுக்கான அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்படும் வகையில் பொறுப்புக்கள் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன. | அனைத்து பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கா ன தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி மற்றும் உதவியாளர் ஆவணத்தின் 12 ஆம் பந்தி | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் குறைந்தபட்சம் 02 மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ஒரு குழுக் கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் தொடர்ந்த கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக நாட்டில் நிலவிய பூட்டுதல் காரணமாக ஒரே ஒரு கூட்டத்திற்கு மாத்திரமே வழிநடாத்தல் குழுக் கூட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன , சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்குமாறு பதவியணியினரிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை மற்றும் செயற்திட்ட செயற்பாட்டு கையேட்டு அறிவுறுத்தலுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உதவியாளர் ஆவணத்தின் கண்காணிப்புத் திட்டத்தின் 10 ஆம் பந்தி | நிகழ்ச்சித்திட்டத்தின் சார்பாக செய்யப்படும் செலவினங்கள் உட்பட தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்று வருடாந்த அடிப்படையில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் | இந்த செயற்திட்டம் 2020 ஆம் ஆண்டில் வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பதவியணியினரின் கீழான ஒரு அலகு மூலம் அமுல்ப்படுத்தப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டில் அலகை கலைத்து அமைச்சின் | வருடாந்த அடிப்படையில் கணக்காய்விற்கு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 07 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | அதிகாரிகளின் கீழ் செயற்படும் பதவியணியினரிடம் இது ஒப்படைக்கப்பட்டது. இதனால் இறுதி கணக்கு அறிக்கைகளை தயாரித்தல் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் புதிய பதவியணியினரின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. புதிய பதவியணியின் அதிகாரிகள் அவர்களது முக்கிய கடமைக்கு மேலதிகமாக செயற்திட்டத்தின் செயற்பாடுகளை மேற்கொள்கிறதுடன் இறுதி கணக்கு அறிக்கைகளை தயாரிப்பது தொடர்பான தகவல்கள் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட வேண்டியிருந்ததன் காரணமாக தாமதம் ஏற்பட்டிருந்தது. |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| செயற்பாடு | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணங்கள் | முகாமைத்துவத் தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | | | | |
| சிவில் வேலை, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தளபாடங்கள், திறன் மேம்பாடு, ஆலோசனை சேவை, செயற்திட்ட முகாமைத்துவம் | 06 | 01 | சிவில் வேலை, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தளபாடங்கள், திறன் மேம்பாடு, ஆலோசனை சேவை, செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய ஆறு பணிகள் 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் | 2019 ஏப்ரலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் 2020 சனவரியில் நிலவிய கொவிட் பூட்டுதல் காரணமாக, திட்டமிட்டவாறு ஏனைய நடவடிக்கைகளை | ஏப்ரல் 2019 இல் ஈஸ்டர் தாக்குதல் மற்றும் ஜனவரி 2020 இல் கோவிட் லாக்டவுன் காரணமாக, திட்டமிட்டபடி மற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. | வழங்கப்பட்ட காலத்திற்குள் செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| சேர்க்கப்பட்டுள்ளன. எனினும் 2020 ஆம் ஆண்டில் பாடசாலை தெரிவுசெய்தல் நடவடிக்கைகளின் திட்டமிடல் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் ஏனைய 05 முக்கிய செயற்பாடுகளில் முன்னேற்றம் அடைந்துகொள்ளப் பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ள முடியவில்லை. |

**3.2 விளைவற்ற வளங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 49 மில்லியன் தொகையான உள்ளூர் நிதி மற்றும் ரூபா 204 மில்லியன் தொகையான வெளிநாட்டு நிதி முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 இல் நாட்டில் நிலவிய பூட்டுதல் மற்றும் கடமைக்கு வருவதற்கான கட்டுப்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதிகள் தொடர்பாக எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைந்துகொள்ளத் தவறியதால் பின்தங்கியுள்ளன. | குறிப்பிட்ட காலப்பகுதியினுள் கடன் நிதிகள் வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| உரிய அதிகாரியால் உள்வருதல் மற்றும் புறப்படுதல் நேரங்களை உறுதிப்படுத்தாமல் தயாரிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிற்கு மேலதிக நேர படி செலுத்தப்பட்டுள்ளது. | வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அதிகாரிகளை உள்ளடக்கிய செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் பொருத்தமான உள்வருதல் மற்றும் புறப்படுதல் நேரங்களை உறுதிப்படுத்தாமல் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்படுகிறது. கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்களை சான்றுபடுத்தும் போது அனைத்து தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை சரிபார்ப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. | கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்கள் அனைத்துத் தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை சரிபார்க்க வேண்டும். |